**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 02.07.2025**
**OS. No. 89/2019**
**வழக்கு சாட்சி PW.1–ரங்கநாதன், த/பெ.தங்கவேல்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

2) ச.எண்.16/1B என்னுடைய சொத்து இல்லை என்றும், 1ம் பிரதிவாதி மகாலிங்கத்தின் சொத்து என்றால் சரிதான், அதில் வழிப்பாத்தியம் எனக்கு உள்ளது. அவ்வாறு வழிப்பாத்தியம் உள்ளது என்று விளம்புகை பரிகாரம் இந்த வழக்கில் நான் கோரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் எதிர் வழக்குரையில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்று சொல்லியப்பிறகும், வழக்கை இதுநாள் வரை திருத்தவில்லை என்றால் சரிதான். ச.எண்.16/1B ன் உண்மையான உரிமையாளரான 1ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல.

3) என்னுடைய சொத்திற்கு தென்வடலாக ஒரு மண் ரோடு செல்கிறது என்றால் சரிதான். அந்த ரோட்டை ஒட்டி ச.எண்கள்.15/7, 15/8 ஆகிய சொத்துக்களை நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். ஆதியில் அனைத்து சொத்துக்களும் ராம கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு மூன்று வாரிசுகள் என்றால் சரிதான். அவர்கள் பெயர்கள் சிங்காரம், பெருமாள் கவுண்டர், தங்கவேல் என்றால் சரிதான். 16.02.1968ல் ராமகவுண்டர் இறந்த பிறகு அந்த சொத்துக்களை அவரது வாரிசுகள் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகபிரிவினையில் ச.எண்.207/2E சொத்தானது என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) ச.எண்.16/1B ல் கண்ட சொத்து எங்களுக்கு ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான், வழிப்பாத்தியம் மட்டும் கொடுத்துள்ளனர். ஆனால் இவ்வழக்கில் ச.எண்.16/1B மற்றும்

ச.எண்.207/2E இரண்டுமே என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டதாக பத்தி 3ல் சொல்லியுள்ளேன் என்றால் வழிப்பாத்தியத்தை தான் அவ்வாறு கூறியுள்ளேன். வா.சா.ஆ.3 பாகபிரிவினை பத்திரத்தில் A செட்டியூல் சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் என் பெரியப்பா பெருமாள் (எ) ராமகவுண்டருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. B செட்டியூல் சொத்து என் மற்றொரு பெரியப்பா சிங்காரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. C செட்டியூல் சொத்து என் தகப்பனார் தங்கவேலுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

5) வா.சா.ஆ.3 பாகபிரிவினை பத்திரத்தில் ச.எண்.16/1B ன் வழியாக என் தகப்பனாருக்கு தடப்பாத்தியம் உள்ளதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தடப்பாத்தியம் குறிப்பிடாத பத்திரத்தை இவ்வழக்கில் ஏன் தாக்கல் செய்துள்ளோம் என்றால் ச.எண்.16/1B ன் வழியாக தடப்பாத்தியம் உள்ளதை காண்பிக்க தாக்கல் செய்துள்ளோம், ஆனால் அவ்வாறு பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1970 மற்றும் 1974 காலகட்டத்தில் எனது பெரியப்பா சிங்காரம் ச.எண்.207/2 மற்றும் ச.எண்.16/1 நிலங்களை பெருமாள் கவுண்டர் மற்றும் ரங்கநாதனிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

6) அவ்வாறு கிரையம் பெற்றது குறித்து என் பிராதில் நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். பாகபிரிவினை செய்யப்பட்ட அனைத்து சொத்துக்களும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதில் நாங்கள் தடவழி உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. நாளது தேதிவரை ச.எண்.16/1B ன் பட்டா, சிட்டா ஆகியவை 1ம் பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். 29.03.2019 ல் இல்லாத ஒரு தடத்தை பிரதிவாதிகள் கல் போட்டு தடுத்தார்கள் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு தடுத்திருந்தால், நாங்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்து அதை ஆவணமாக தாக்கல் செய்திருப்போம் என்றால் ஊர் பஞ்சாயத்தில் பேசினோம்.

7) பாகபிரிவினை பத்திரத்தில் இல்லாத ஒரு தடவழியை நான் 1968 முதல் அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, ரங்கநாதனிடம் 1ம் பிரதிவாதியின் தந்தை வாங்கிய கிரைய ஆவணத்தில் தடப்பாத்தியம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட விவரத்தை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும், அந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை ஆய்வு செய்தார் என்றால் சரிதான். அவர் தனது அறிக்கையில் தென்வடலாக தார் ரோடு செல்வதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

8) மேற்கண்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தடவழி இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனால் தான் அதை இந்த வழக்கில் குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல, ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆட்சேபனையும் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஒரே மகன் என்றும், அவருக்கும் உடல்நிலை சரியில்லை என்றும், அவரை மிரட்டி சொத்தை அபகரித்து கொள்ளவேண்டும் என்பதற்காக இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், இந்த வழக்கு பிரதிவாதிக்கு அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.